[4th July 1962

அவர்கள் அப்படி ஆராய்ந்து ஒரு முடிவு எடுப்பதற்குமுன் நமது அரசாங்கத்தின் கருத்தை கேட்பார்களா என்பதை திரும்பவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. மூக்கையா தேவர்: இப்போது ஆராய்ச்சி செய்து முடிவெடுத்ததன்மூலமாக எவ்வளவு தண்ணீர் நமது நாட்டிற்கு கிடைக்கும்?

கனம் திரு. வி. ராமைய்யா: ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

வெள்ளாற்றின் குறுக்கே அணைகள் கட்டுதல்

* 107 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன்:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் வெள்ளாற்றில் ஆவுடையார் கோவில் அருகிலும், தண்டலை அருகிலும், மணலூர் அருகிலும் அணைகட்டுகள் கட்ட திட்டமிடப்பட்டிடுள்ளதா?

THE HON. SRI P. KAKKAN: Yes, Sir, sanction has been accorded for construction of an anicut at Avadayarkoil. As regards anicuts in other two villages, the matter is under consideration.

திரு. ஆ. துரையரசன்: வெள்ளாற்றில் ஆவுடையார் கோவில் அருகிலும், மணலூர் அருகிலும், தண்டலை அருகிலும் அணைக் கட்டுகள் கட்டுவதற்கு மாவட்டத் கண்டல்நாயகம் அவர்களால் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டதா? அதற்காகத் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

கனம் திரு. பூ. கக்கன்: இதைத்தான் நான் சொன்னேன். ஆவுடையார்கோவில் அணை சாதகமாக இருக்கிறது. அடுத்து மணலூர் அருகில் உள்ள அணைக்கட்டு பரிசீலனையில் இருக்கிறது. இவைகள் எல்லாம் பரிசீலனை செய்து பின்னால் எடுத்துக்கொள்ளப் படும்.

Tanks in Erode taluk (restoration)

* 108 *Q.*—**SRI M. KALYANASUNDARAM:** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Revenue Board has recommended for the restoration of the Pallipalayam tank and Kannimarkoil tank in Changapalli, Erode taluk; and

(*b*) if so, the reasons for the delay in sanctioning the same?

THE HON. SRI P. KAKKAN: (*a*) A scheme for the restoration of Pallapalayam tank in Chengapalli village has been recommended by the Board for sanction. The proposal is under the consideration of the Government. No proposal has been received by the Government or the Board, in respect of Kannimarkoil tank; and

(*b*) The final report of the Board of Revenue relating to the restoration of the Pallapalayam tank was received on 1st May 1962 and orders of Government will be issued shortly.